புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மே 18, 2017 | புரட்சி 16 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00

## உணவு உரிமை – கருத்துரிமையை பறிக்காதே!

# தடையை மீறி மாட்டுக்கறி உண்ணும் போராட்டம்: சேலத்தில் கழகத்தினர் கைது






மாட்டுக் கறியை உண்ணத் தடைபோடும் பார்ப்பன மதவாத சக்திகளுக்கு ஆதரவாகவே தமிழக காவல்துறையும் செயல்பட்டு வருகிறது. மாட்டுக்கறி உணவு - உழைக்கின்ற மக்களின் உணவு; புரதச் சத்து மிக்க உணவு; ஆடு மற்றும் கோழிக் கறியைச் சாப்பிடும் உரிமை இருக்கும்போது, உலகம் முழுதும் மக்களால் உண்ணப்படும் மாட்டுக்கறி உண்பதை மதத்தைக் காரணம் காட்டி, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் தடை போட்டுள்ளதோடு, கண்காணிப்புக் குழுக்கள் என்ற பெயரில் காலித்தனத்திலும் இறங்கி வருகிறார்கள்.

இந்த நிலையில் மே 12ஆம் தேதி சேலம் நகரில் மாட்டுக்கறி அரசியல் கருத்தரங்கம் ஒன்றுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. டேவிட் தலைமையில் மாநகரத் தலைவர் த.பரமேசு முன்னிலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வழக்கறிஞர் பொ.இரத்தினம் ஆகியோர் உரையாற்ற இருந்தனர். மதியம் ரூ.50 கட்டணத்தில் மாட்டுக்கறி உணவு வழங்க ஏற்பாடாகியிருந்தது. ‘லால் மஜித் மண்டபம்’ என்ற தனியார் அரங்கில் நடந்த இந்த கருத்தரங்குக்கு காவல்துறை தடை விதித்தது.

இதைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை வெளியிட்டார். “கருத்துரிமை - உணவு உரிமையை மறுக்கும் காவல்துறையைக்

(4ஆம் பக்கம்)

### போராட்டத்தில் எழுப்பிய முழக்கங்கள்!

கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்!
கருத்துரிமையைப் பறிக்கின்ற
காவல்துறையைக் கண்டிக்கின்றோம்!

உணவு உரிமை அடிப்படை உரிமை!
அதனைத் தடுக்க உனக்கே(து), உரிமை!

இராமன் தின்றான் மாட்டுக்கறி
ரிஷிகள் தின்றனர் மாட்டுக்கறி
விவேகானந்தர் தின்றார் மாட்டுக்கறி
காவிக் கட்சி அறிவாளிகளே
நாங்கள் தின்றால் உனக்கேன் நோவுது?

தமிழ்நாட்டை ஆள்வது அ.தி.மு.க.வா?
பாரதிய ஜனதாக் கட்சியா?
வெட்கக் கேடு! மானக்கேடு!
தமிழ்நாட்டுக்கே மானக்கேடு!

காவல்துறையே காவல்துறையே!
காவிக்கு வால்பிடிக்கும் காவல்துறையே!
நாடெல்லாம் கிடைக்குது பீப் பிரியாணி!
அரங்கினுள் சாப்பிட்டால் தடைபோட
அறி(வு)ஏன் கெட்டது காவல்துறையே!

பன்றிக்கறி வெறுக்கும் முஸ்லிம் நாட்டில்
தடையின்றி கிடைக்குது பன்றிக் கறி!
மாட்டுக்கறி சாப்பிடும் இந்து உள்ள நாட்டில்
மாட்டுக்கறிக்கு தடை ஏனோ?
மதவெறியர்கள் முஸ்லீமா?
மானங் கெட்ட காவிகளா?

பார்ப்பான் மந்திர கலியாணம்
பார்ப்பான் மந்திர வழிபாடு
ஏற்றுக்கொண்ட ஏமாளிகளிடம்
பார்ப்பான் உணவையும் திணிக்கின்றாய்!
பார்ப்பான் மட்டும்தான் இந்துவா?
பார்ப்பான் மட்டும்தான் மனிதனா?
மற்றோர் எல்லாம் மிருகங்களா?

அசைவம் சாப்பிட்டால் இந்து இல்லை!
அறுதியிட்டு சொல்வது எச்.இராஜா
இந்துவெறி கட்சியில் இருப்போரே!
இன்னும் இருப்பதா அவனோடு
வெட்கக் கேடு மானக் கேடு!

மாட்டுக்கறி தின்பது மலம் தின்பதாம்!
எடுத்துச் சொல்வது இந்து முன்னணி
எடுத்துச் சொல்வது இராம. கோபாலன்
மாட்டுக்கறி சாப்பிடும் மானமுள்ளோரே
இனியும் தொடர்வதா இந்துமுன் னணியில்?

– என்ற முழக்கங்களை தோழர்கள் எழுப்பினர்.

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

## உரிமைகளை நிலைநாட்ட தடையை மீறுவோம்

போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்த அறிக்கை.

23-4-2017 அன்று கொளத்தூரில் மாட்டுக்கறி அரசியல், மாட்டுக்கறி விருந்து என்றறிவித்தோம்; அனுமதி மறுப்பு என்றது காவல்துறை. 2-5-2017 அன்று ஈரோட்டிலதே நிகழ்வு. நாம் அனுமதி கேட்கவில்லை; பாதுகாப்பு மட்டும் கேட்டோம். ஆனாலும் அனுமதி இல்லை என்றது காவல்துறை; உயர்நீதி மன்றமோ அடுத்த மாதம்தான் விசாரிப்பேன் என்கிறது. 12-5-2017 அன்று சேலத்திலும் அதே நிகழ்வு. பாதுகாப்பு மட்டுமே கேட்டிருந்தோம். அனுமதி இல்லை என்று கூறிவிட்டது காவல்துறை.

அரசியல் சட்டத்தின் 48ஆவது பிரிவு நேரடி சட்டம்கூட இல்லை; வெறும் வழிகாட்டும் நெறிமுறை மட்டும்தான். அப்பிரிவு “பால் கொடுக்கும் பசுக்களையும், பாரம் இழுக்கும் எருதுகளையும், இளங்கன்றுகளையும் வெட்டுவதை வேண்டுமானால் - தடை செய்ய விரும்பினால் - மாநில அரசுகள் சட்டம் இயற்றிக் கொள்ளலாம் என்றுதான் கூறுகிறது. நாமோ பால் கொடுக்காத, விவசாய வேலைக்குப் பயன்படாத மாட்டின் கறியைத்தான் உண்ணப்போகிறோம் என்பதை தெளிவாக - அடிமடையன் கூட புரிந்துகொள்ளும் வகையில் நமது பாதுகாப்பு கோரும் விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ளோம். தமிழ்நாட்டில் பசுவதை தடை சட்டமும் இல்லை.

அரசியல் சட்டத்தை நாம் மதிக்கிறோம். ஆனால் அடிப்படை உரிமையாய் கருத்துரிமையை வழங்கும் அரசியல் சட்டத்தை துச்சமென அலட்சியப்படுத்தி கருத்தரங்கத்துக்குக் கூட அனுமதி மறுக்கிறது காவல்துறை. அரசியல் சட்டத்தைக் காக்கவேண்டிய உயர்நீதிமன்றமும் காவல்துறையை வேறுவகையில் வழிமொழிகிறது. மாட்டுக்கறி தின்பது மலத்தைக் தின்பதற்கு சமம் என்கிறார் இந்துமுன்னணி இராமகோபாலன் ! ( இராமன் பரத்துவாஜர் ஆசிரமத்தில் மாட்டுக்கறி சாப்பிட்டதை வால்மீகி இராமாயணம் கூறுகிறது ) அசைவம் சாப்பிடுவோர் இந்துக்கள் அல்லர் என்கிறார் எச்.இராஜா !

காவிகளின் இக்கருத்தை வேறுவகையில் சொல்லுகிறது காவல்துறை; ‘கலவரத்தைத் தூண்டுவதற்காக இதைச் செய்கிறீர்கள் என்கிறார் உயர்நீதி மன்ற நீதிபதி - இல்லையில்லை - நீதியரசர்( ?) அரசியல் சட்டம் வரையறுத்துள்ள உணவை உண்பதையும், கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் உரிமையையும் யார் வேண்டுமானாலும் மறுத்து கொள்ளட்டும் ! அரசியல் சட்டத்தை மதிக்கிற நாம் அரசியல் சட்ட உரிமைகளை நிலைநாட்டுவோம்; நிலைநாட்டியே தீருவோம் !

அன்பார்ந்த தோழர்களே !

அரசியல் சட்டம் வழங்கியுள்ள உணவு, கருத்து உரிமைகளை நிலை நாட்டவும், காவல்துறையின் சட்டவிரோத ஆணைகளைத் தகர்த்தெறியவும் 12-5-2017 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பாக கூடுவோம் ! அலைகடலென அணிதிரண்டு வாரீர் ! ஒத்த கருத்துள்ள தோழர்களையும் உடன் அழைத்து வாரீர் ! - என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை விடுத்திருந்தார்.

# பெரியாரின் சிந்தனைகளுக்கு - தத்துவ மரபுகளிலே வேர்கள் உண்டு!

மார்க்சிய சிந்தனையாளரும் இந்திய தத்துவ மரபுகள் குறித்து ஆய்வு நூல்களை எழுதியவருமான பேராசிரியர் ந.முத்து மோகன், 'உங்கள் நூலகம்' மாத இதழுக்கு (ஏப். 2017) அளித்துள்ள பேட்டி இது. சமகால சமூக அரசியல் சூழலில் பெரியார், அம்பேத்கர் மற்றும் இடதுசாரிகள் பிரச்சினைகளை அணுகுவதிலும், மக்கள் திரளைக் கட்டமைப்பதிலும் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை சுயவிமர்சனங்களோடு முன் வைக்கிறது இந்தப் பேட்டி. இந்திய தத்துவ மரபில் இலக்கியங்களில் புதைந்துள்ள முற்போக்கு கருத்துகளை ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும். அந்தப் பார்வையில் விவாதங்களுக்கும் விமர்சனங்களுக்குமான அவசியத்தை வலியுறுத்துகிறார். திராவிடர் விடுதலைக் கழகம் சேலத்தில் நடத்திய வேத மரபு மறுப்பு மாநாடு, இந்த திசை வழியில் மேற்கொண்ட முன்முயற்சியாகும். உரத்த சிந்தனைகளுக்கு வழி திறந்து விடும் இந்த பேட்டியை அதன் முக்கியத்துவம் கருதி 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது.

*இந்தியத் தத்துவங்களுக்கு ஒரு சமகாலத் தன்மை உள்ளதா? அதாவது நமது சமகாலப் போராட்டங்களுக்கு இந்தியத் தத்துவங்களைப் பயன்படுத்த முடியுமா? அவ்வாறான இயல்பு இந்தியத் தத்துவங்களுக்கு உண்டா?*

எந்தத் தத்துவத்திற்கும் இயல்பிலேயே சமகாலத் தன்மை அதிகம். உள்ளது என்றெல்லாம் கூறிவிட முடியாது. பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியம் ஓரிடத்தில், "வரலாற்றுத் தகவல்கள் தாமாகப் பேசாது. அவற்றை நாம் தான் பேச வைக்க வேண்டும்" என்று எழுதிச் செல்வார். தானாகவே எல்லா வரலாற்று மெய்மைகளும் பேசிவிடாது. இதுநாள் வரையிலும் இந்தியத் தத்துவங்களை வலதுசாரிகள் பக்கமாக நாம் பேசவிட்டுள்ளோம் என்பதுதான் உண்மை. வேதாந்த, வைதீகத் தளங்களிலேயே அதிகமாக இந்தியத் தத்துவங்களைப் பேச விட்டுள்ளோம். இதற்குக் காரணம் நம்முடைய பலவீனங்கள், இந்தியத் தத்துவங்கள் குறித்து நாம் ஈடுபாடும் காட்டவில்லை; முன்கூட்டியே முன் முடிவுகள் செய்துகொண்டு, அவற்றில் ஒன்றும் தேறாது என்றும், கழித்துத் தள்ள வேண்டியவை என்றும் அவசரமாகப் போய்விட்டோமோ என்ற உணர்வு எனக்குத் தோன்றுகிறது. இன்றைக்கு வரைக்கும் இந்துத்துவா வெற்றி பெற்றிருப்பதற்கு இதுதான் காரணம்.

இந்தியத் தத்துவங்கள் குறித்து நிறைய வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. ஓராள், இரண்டாள் செய்ய வேண்டிய வேலை இல்லை; நூற்றுக்கணக்கான ஆட்கள் செய்ய வேண்டிய வேலை. இந்த வேலைகளைக் கொண்டு தான், அவற்றுக்குச் சமகாலத் தன்மையைக் கொண்டுவர முடியும்.

உட்டோபியாக்கள் (கனவு காணும் சிந்தனை) ஐரோப்பாவில் மட்டும் உருவாக்கப்படவில்லை. இங்கும் கனவுத் தேசங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜீவா அதைக் கம்பனில் கண்டுள்ளார். ரவிதாஸின் பேகம்புறா, குரு கோவிந்தரின் கால்சா ராஜ் இவை போல ஒவ்வொரு இந்திய மொழிகளிலும் ஏராளமான கனவுகள் கிடக்கின்றன. இவற்றை நாம் கையிலெடுக்கும்போது, அவை ஆயுதங்களாக, எதிர்ப்பின் அடையாளங்களாக மாற முடியும். இந்த நாட்டில் சனாதன வடிவங்கள் நிறைய கிடப்பதைப் போன்று, எதிர்ப்பின் வடிவங்கள் நிறைய இருக்கின்றன- அவற்றை நாம் கண்டறிய வேண்டும். இடதுசாரிகள், ஜனநாயகவாதிகள், தலித்துகள், பெண்ணியவாதிகள், பழங்குடிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து எதிர்ப்பின் வடிவங்களைக் கண்டறிந்து முன்னிலைப்படுத்த வேண்டும்.

இப்போது "ஜனசக்தி" ஏட்டில் இலத்தின் அமெரிக்காவைப் பற்றி தொடர்க் கட்டுரை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக இலத்தின் அமெரிக்கப் பழங்குடிகள் இலக்கியங்களைப் படித்தபோது, ஒவ்வொரு பழங்குடி இலக்கியங்களிலும் ஏக்கங்கள், போராட்ட வடிவங்கள், மாற்று குறித்த சிந்தனைத் தேடல் முதலான ஏராளமான விசயங்களைக் காண முடிகின்றது. இந்திய மக்களிலும் மிக அதிகமானோர் பழங்குடிகள் தாம். மிகக் குறைவானவர்களே மேட்டுக் குடிகள் இந்தப் பழங்குடி மக்களின்



**மரபில் இடம் வேண்டுமானால் வேதாந்தத்தைப் பேசினால்தான் உண்டு. சமஸ்கிருதத்தை ஏற்றுக் கொண்டால்தான் உண்டு என்ற வாதம் மிகமிக மொன்னையானது.**

கனவுகளைத் தோண்டி எடுத்தோமென்றால், இன்றைக்குப் போராடுவதற்கான ஆயுதங்களாக மாறவும்கூடும். இதில் இன்னொரு முக்கியமான விசயம் ஒன்று உண்டு.

இடதுசாரிகளாகிய நாம் அரசியலில் நுழைந்தபோது, அரசியல் என்பதைதான் மிகப் பெரிய தளமாக நாம் அடையாளம் கண்டுகொண்டோம். அரசியல் என்பது நம்மைப் பொறுத்தவரையில், அரசு குறித்த அரசியல், காலனியம் குறித்த அரசியல், இந்திய அரசாங்கம் குறித்த அரசியல், லெனின்கூட சொன்னார் அல்லவா, "அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் முக்கியமான விசயம்" என்று. இதை முன்வைத்துதான் நாம் வேலை செய்தோம். ஆனால், அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதைவிட, ஒரு நாட்டின் பண்பாடுகளை அறிவது, உள்வாங்குவது, அவற்றுக்குள் ஊடாடிச் செல்வது, அவற்றில் சமகாலத் தன்மைகளைக் கண்டறிவது, கனவு நிலங்களைக் கண்டறிவது, நடைமுறைக்கான நிலங்களாக மாற்றுவது - அதாவது

**மேலோட்டமாகப் பார்க்கும்போது, பெரியாரைப் பொறுத்தமட்டில், அவருக்கு மூன்று விதமான வேர்கள் காணப்படுகின்றன. ஒன்று சாருவாகம் - உலகாயதம். இதைப் பற்றி, பிரகிருதிவாதம் அல்லது மெட்டிரியலிசம் என்று தலைப்பிட்டு அவரே பேசியுள்ளார்.**

உட்டோபியாவை (கற்பனைக் கனவுகளை) மெய்யானதாக மாற்றுவது போன்ற தேவைகள் எல்லாம் இங்கு இருக்கின்றன.

பண்பாட்டு அரசியலில் இந்துத்துவவாதிகளும், திராவிட இயக்கவாதிகளும் நம்மை இடதுசாரிகள் முந்திச் சென்று விட்டார்கள். நாம் பல நல்ல வேலைகளைச் செய்துள்ளோம். ஆனால் பரவலாகச் செய்யவில்லை. வெகுசன தளத்திலும் செய்யவில்லை. சில சமயங்களில் அறிவாளிகளாக மட்டுமிருந்து, தத்துவ அறிவாளிகளாக, அரசியல் அறிவாளிகளாக, வரலாற்று அறிவாளிகளாக மட்டுமிருந்து செய்துள்ளோம். வெகுசனத் தளத்தில் கவனக் குறைவாக இருந்துள்ளோம். உதாரணமாக, வெகுசன சினிமாக்கள் என்றாலே நமக்கொரு அலட்சிய பாவம். எங்கள் காலத்தில் எல்லாம் அப்படித்தான் நிலைமை இருந்தது. இப்போது நிலைமை கொஞ்சம் பரவாயில்லை. நம் தலைவர்கள் வெகுசன சினிமாக்களைப் பற்றிப் பேசுவது விதிவிலக்குகளாக நடந்தனவே தவிர, பொதுவாகப் பேசவில்லை என்றே சொல்லிவிடலாம். வெகுசன மக்களுக்காகத்தான் நாம் போராடியுள்ளோம். நம் கட்சி (இடதுசாரி இயக்கம்) வெகுசனக் கட்சியாக ஆக வேண்டும் என்பது நம் இலட்சியம். ஆனால் நம்மை அறியாமலேயே, வெகுசனத் தளத்தைத் தொடர்ந்து புறக்கணித்து வந்துள்ளோம். ஆகவே, வெகுசனத் தளத்தைக் கவனமெடுத்தல், வெகுசனமயமாக்கல் போன்றவற்றைக் கவனம் எடுத்துக் கொண்டால், இந்தியத் தத்துவங்களைச் சமகாலப்படுத்தும் பிரச்சினையில் பல புதிய புள்ளிகளை வெளிக்கொணர முடியும்.

*இந்தியத் தத்துவ மரபுகளுக்குள் வைத்து பெரியார், அம்பேத்கர் ஆகியோரைப் புரிந்துகொள்ள முடியுமா? எப்படி புரிந்து கொள்வது? இந்தியத் தத்துவ மரபுகளில் பொருள் முதல்வாத மரபுகளின் தொடர்ச்சியாக இன்றைய இந்திய மார்க்சியர்கள் உள்ளனர் என்று சட்டோபாத்தியாயா 'இந்திய நாத்திகம்' நூலின் முன்னுரையில் கூறுவார். அப்படி ஒரு தொடர்ச்சியை வேர்களை வலியுறுத்த முடியுமா?*

இந்தியத் தத்துவ மரபுகளுக்குள் வைத்து பெரியார், அம்பேத்கர் ஆகியோரைப் புரிந்துகொள்ள முடியுமா என்பதற்கு இரண்டு விதமாகப் பதில் சொல்லலாம்.

அம்பேத்கர் ரொம்ப வலுவாக பௌத்தத்தைக் கையிலெடுத்தார். தேவைப்பட்ட இடங்களில், அதில் சில முக்கியமான திருத்தங்களைக்கூட செய்தார். பௌத்தத்தைக் கொஞ்சம் புரட்சித்தன்மை கொண்டதாக மாற்றினார். சமூக மய்யப்படுத்தினார். அதனால் அம்பேத்கருக்கு இந்திய மரபுகளுக்குள் வேர்கள் கிடையாது என்று சொல்ல முடியாது. ஏனென்றால், தனது வேர்களை வேகமாகவும், அழுத்தமாகவும், தொடர்ச்சியாகவும் பௌத்தத்திற்குள் அம்பேத்கர் தேடியுள்ளார். அவர் பௌத்தத்தை முன் வைத்து மார்க்சியத்தை எதிர்கொள்ளவும் முயற்சி செய்தார் என்று சொல்ல முடியும். ஆகவே அம்பேத்கருக்கு இந்திய மரபுகளுக்குள் வேர் வலுவாகத்தான் இருக்கின்றது.

இதற்கு இணையாக இங்கு அயோத்திதாச பண்டிதர் வேலை செய்தார் என்பதையும் பார்க்க முடியும். அம்பேத்கருக்கு முந்தியவர் அயோத்திதாசர். அவரும் பௌத்தத்திற்குச் சென்றுசேரும் ஒரு நிலை இருந்தது. ஆகவே, தலித் இயக்கம் இந்த மரபு சார்ந்த வேரை நன்கு தேடியுள்ளது என்று தோன்றுகிறது.

வேகமாக, மேலோட்டமாகப் பார்க்கும்போது, பெரியாரைப் பொறுத்தமட்டில், அவருக்கு மூன்று விதமான வேர்கள் காணப்படுகின்றன. ஒன்று சாருவாகம் - உலகாயதம். இதைப் பற்றி, பிரகிருதிவாதம் அல்லது மெட்டிரியலிசம் என்று தலைப்பிட்டு அவரே பேசியுள்ளார். மற்றொன்று நியாய-வைசேடிகத்தை ஓரளவு சொல்லலாம். இதனுடன் பௌத்தக் கூறுகளையும் இணைத்து ஏற்றுக் கொண்டுள்ளார். இதைப் பற்றி இப்போது வெளியாகியுள்ள, 'இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்' என்ற எனது நூலில், 'பெரியாரும் பௌத்தமும்' என்ற கட்டுரையில், அவரது அனாத்மாவாதம், துக்கம், துக்க நிவாரணம் போன்ற கருத்தாக்கங்கள் குறித்து எழுதியுள்ளேன். பெரியாரிடமும் சாருவாகம்-உலகாயதம், நியாய வைசேடிகம், பௌத்தம் ஆகிய வேர்கள் இருக்கின்றன. ஆனால் இந்த வேர்களை எல்லாம் அவர் ரொம்ப சிலாகிக்கவில்லை. அம்பேத்கர்கூட தன் வேர்கள் குறித்து அவ்வப்போது சிலாகித்துப் பேசியுள்ளார். ஆனால் பெரியார் அந்த மாதிரி சிலாகித்துப் பேசுவதற்காக அந்தத் தத்துவ நூல்களை மெனக்கெட்டுப் படிப்பது போன்ற செயல்களில் ஈடுபடவில்லை. அவரது கேள்வி ஞானம், சில அறிஞர்களுடனான உரையாடல், தேர்ந்தெடுத்த நூல்களைப் படிப்பது ஆகியவையே அவருக்குப் போதுமானதாக இருந்தது. திருக்குறளில் பெரியார் நுழைந்து பார்த்துள்ளார். திருக்குறளின் கருத்துகளை ஏற்றுக் கொண்டு உள்ளார். விமர்சனங்களையும் வைத்துள்ளார்.

சமூக வரலாற்று வெளிகளில் தீவிரமான உரையாடல்களுக்கு ஒருவர் முயலும்போதே, மரபு சார்ந்த வேர்கள் அவருக்குக் கிடைத்துவிடும். மரபார்ந்த வேர்கள் என்பது, கண்ணை மூடிக் கொண்டு ஒன்றை ஏற்றுக் கொள்வது என்பதல்ல. வேர் என்பது விமர்சன ரீதியானதாகவும் இருக்க முடியும். நிராகரிப்பதாக இருக்கக் கூடாது. நிராகரிப்பு வேறு. விமர்சனம் என்பது வேறு. நிராகரிப்பதை வேர் என்று சொல்ல முடியாது. அப்படிப் பார்க்கும்போது பெரியார், அம்பேத்கருக்கு வலுவான வேர்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது.

இன்னொரு கோணத்திலிருந்து இந்திய மரபுகளில் பெரியார், அம்பேத்கருக்கு வலுவான வேர்கள் உண்டு என்று சொல்ல முடியும். அது என்னவென்றால், அவர்கள் பேசிய பிரச்சினைகளின் சமூகவியல் பரிமாணம், சாதி, வருணம், பார்ப்பனியம், இவர்கள் காலத்தில் முன் வைக்கப்பட்ட இந்துமதம் என்னும் அடையாளம், அந்த இந்துமதத்தை வைத்து ஒரு தேசியத்தை உருவாக்கும் அரசியல் ஆகிய பிரச்சினைகளின் மூலமாகவும் அந்த வேர் கிடைக்கின்றது. அதாவது, எந்தப் பிரச்சினையை எடுத்துப் பேசுகிறார்கள், எந்தப் பிரச்சினையை முன்னிலைப்படுத்துகின்றார்கள் என்பது மூலமாகவே, அந்த மரபின் உரையாடல்களில் ஓர் இடம் கிடைத்து விடுகின்றது.

இந்த அளவுக்கு மார்க்சியர்களுக்கு அந்த வேர்களில் வலு இல்லை. நமக்கு உலகாயத-சாருவாக வேர் உண்டு என்று தேவிபிரசாத் சொல்கிறார். ஆனால் அந்தத் தத்துவச் சொல்லாடல்களில் நமக்கு ஒரு தொடர்ச்சி இல்லை. நாம் (இடதுசாரிகள்) சாதி, வருணம், பார்ப்பனியம், இந்துமதம் பற்றியெல்லாம் அதிகமாகப் பேசவில்லை. மார்க்சியர்களைப் பொறுத்தமட்டில், இதில்தான் பிரச்சினை ஏற்படுகின்றது. செவ்வியல் மார்க்சிய மொழியில் சொல்ல வேண்டுமென்றால், மார்க்சியர் சமூகரீதியாக சாதியைவிட, வர்க்கத்தை முன்னிலைப்படுத்தி விட்டார்கள். நடைமுறைத் தளத்தில் சாதியை

(4ஆம் பக்கம்)

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

# அம்பேத்கர் - ஜாதித் தலைவரல்ல; சமூக விடுதலையின் புரட்சியாளர்

*அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் என்று கூறுவது தவறு. அவர் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார்.*

*14.4.2011 வியாழக்கிழமை அம்பேத்கர் பிறந்த நாளில் சேலத்தில் ஆற்றிய உரை:*

புரட்சியாளர் அம்பேத்கரை நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டும்? நாம் ஏன் அவரை மற்றவர்களிடம் இருந்து பிரித்து வேறுபடுத்தி தனித்துவமாக பார்க்கிறோம் என்பதில்தான் அம்பேத்கருக்கு பிறந்த நாள் எடுப்பதன் பலனாக இருக்கும். புரட்சியாளர் அம்பேத்கர் பல சிறப்புகளை கொண்டவர். அவர் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்திருந்தாலும், வெளிநாடுகளுக்கு சென்று படிக்கிற வாய்ப்பினைப் பெற்றார். அங்கு போய் ஆய்வு பட்டங்களையும், பல உயர் பட்டங் களையும் பெற்றார். தத்துவ துறையில், பொருளியல் துறையில், சட்டத் துறையில் பட்டங்களைப் பெற்று திரும்பி வந்தார் என்றால் பெயருக்கு பின்னால் போட்டுக் கொள்வதற்காக அல்ல.

இந்த இந்திய சமுதாயத்தை திருத்த பலர் வந்தார்கள். இந்த சமுதாயத்தில் இருக்கிற கேடுகளை நீக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால், இந்த சமுதாயத்தை மிகச் சரியாக புரிந்து கொண்டவர்கள் சிலர் மட்டுமே. ஜோதிபா புலே தொடங்கி வைத்த புரட்சியை, சரியான பார்வையை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் போன்றவர்கள்தான் எடுத்துச் சென்றார்கள். மற்றவர்கள் எல்லாம் இருந்ததை மெல்ல சீர்திருத்தி, கொஞ்சம் மாற்றி, அதற்கு புதிய வண்ணத்தைப் பூசிவிட்டு செல்வதாக இருந்த காலத்தில், அடிப்படையையே மாற்றியாக வேண்டும் என்று எண்ணிய தலைவர், அதற்காக தனது முழு அறிவை, உழைப்பை, எல்லாவற்றையும் பயன்படுத்திய தலைவர், தத்துவத் துறையில் ஆய்வு செய்யப் போனவர், ஆய்வு மாணவராக இருந்த காலத்தில் ஒரு ஆய்வு கட்டுரை எழுதுகிறார். இந்திய சாதியினுடைய தோற்றம், அதன் செயல்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்து மாந்தவியல் துறையில் அந்த அறிக்கையை தருகிறார். அவருடைய இருபத்தி ஐந்தாம் வயதில், அவர் ஆற்றிய ஆய்வுரை இன்றைக்கு வரைக்கும் எல்லா விதத்திலும் அதை நாம் புரட்டிப் பார்க்கிற பொழுது, இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஆற்றப்பட்ட உரை. இந்த சமுதாயத்தின் கேடுகளாக, இந்த சமுதாயத்தின் நோயை தீர்ப்பதற்கான வழியாக அவர் சொன்னதைத் தான் நாம் மீள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

அவர் மகத் மாநாட்டில் பேசினார். பல இடங்களில் பல செய்திகளை பதிவு செய்தார் என்றாலும், லாகூர் மாநாட்டில் அவர் ஆற்ற இருந்த உரை (ஆற்றிய உரை அல்ல) சாதி ஒழிப்பு சங்கத்தார் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் இவரை தலைமை தாங்கி, தலைமை உரையாற்ற அழைக்கிறார்கள். இவர் உரையை எழுதி அனுப்புகிறார். அதை படித்து பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்துவிடுகிறார்கள். இந்த சாதி ஒழிப்புக்காக அவர் சொல்லுகிற வழிமுறைகளைப் பார்த்து அதிர்ச்சி அடைய காரணம்... "இந்து சாஸ்திரங்களின் அதிகாரங்கள் தகர்க்கப்பட வேண்டும். அக மண முறை ஒழிக்கப்பட வேண்டும். இந்து மதம் தகர்ந்தாக வேண்டும். அர்ச்சகர் ஆகும் உரிமையை, உரிய பட்டயம் பெற்றால் அனைத்து சாதியினருக்கும் அளிக்க வேண்டும் என்பதையெல்லாம் வழிமுறையாக சொல் கிறார். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தவர்கள் கொஞ்சம் மாற்றிக் கொள்ள சொல்லி கேட்கிறார்கள். அதில் ஒரு கால் புள்ளியை மாற்றவும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். வேண்டாம் என்றால் திருப்பி அனுப்பி விடுங்கள்" என்று அம்பேத்கர் கேட்கிறார். மாநாட்டையே ஒத்தி வைத்து விடுகிறார்கள்.

நாம் புரட்சியாளர் அம்பேத்கரை, அவரின் கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டுமானால், ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது அந்த நூல். அவர் ஆற்ற இருந்த உரையை நூலாக வெளியிட்டார். நூல் வெளி வந்த இரண்டாம் மாதத்தில், அம்பேத்கரின் அனுமதியோடு தமிழில் பெரியார் வெளியிட்டார். அந்த நூல் தாங்கியிருந்த சிந்தனையைதான் பெரியாரும் கொண்டிருந்தார். அரசியல் நிலைபாடுகளில் இருவருக்கும் சிறு சிறு மாற்றங்கள் இருந்திருக்கலாம். அம்பேத்கர்



ஒன்றுபட்ட இந்தியாவை விரும்பினார். பெரியார் தனித் தமிழ்நாடு பேசினார். இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். பெரியார் இந்தி கூடாது என்று சொன்னார். அரசியல் நிலைகளில் அவரவர்களுக்கு இருந்த கருத்தின் அடிப்படையில் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டோரின் குடியிருப்பை பிற சாதியினர் வாழும் பகுதிகளில் நிறுவ வேண்டும் என்பது பெரியாரின் கருத்தாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனிக் கிணறு வெட்ட காங்கிரஸ் நிதி அனுப்பியது. காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பெரியார் வந்த நாற்பத்தி எட்டாயிரம் ரூபாயை திருப்பி அனுப்பினார். பொதுக் கிணற்றில் நீர் எடுக்க போராட வேண்டுமே தவிர தனிக் கிணறு கூடாது என்பது பெரியார் கருத்து. இன்னொரு பக்கம் அம்பேத்கர் தனிக் குடியிருப்பு வேண்டும் என போராட்டம் நடத்தினார். இப்படி பார்த்தால் அவர்களின் கோரிக்கைகளில் வேறுபாடுகள் போல தெரியும். ஆனால் அடி நீரோட்டமாய் இருவர்

**நான் இந்த சட்டத்திற்கு கட்டுப்பட்டவன். ஆனால் மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னவர் அம்பேத்கர்.**

கருத்தும் சாதி ஒழிப்பே சமூக விடுதலை என்பதாகத் தான் இருந்தது.

பல பேர் படிக்கிறார்கள், பட்டம் பெறுகிறார்கள், தனி மனித வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள் கிறார்கள். ஆனால் புரட்சியாளர் அம்பேத்கர் தான் பெற்ற அறிவை, கல்வியை, பதவியை அனைத்தையும் சமூக மேம்பாட்டிற்காக, சமூக மாற்றத்திற்காக பயன்படுத்திய தலைவர். 1935 இல் மராட்டியத்தில், பம்பாய் மாகாணத்தில் சட்டமன்றத்திற்கு உறுப்பினராக நியமிக்கிறார்கள். நியமனம் பெற்று அவர் ஆற்றிய முதல் உரையிலேயே அங்கிருந்த நில உடமையாளர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து பேசுகிறார். ஆங்கில அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த துரோகங்கள் பற்றி பேசுகிறார். அவர் ஒரு நியமன உறுப்பினராக இருந்தும், நியமித்தவர்களையே விமர்சித்து பேசுகிறார். அவர் பதவி முக்கியம் எனக் கருதவில்லை. அவர் சமஸ்கிருதம் படித்தார், வேதங்களை படித்தார், புராணங்களை படித்தார், சாஸ்திரங்களை படித்தார். எதற்கு பயன்படுத்தினார்? இந்திய சமுதாயத்தில் சாதிய பிடியில் இருந்து மக்களை எப்படி காப்பாற்றுவது என்று அறிவதற்குப் படித்தார். மனுதர்மத்தைப் பற்றி அவர் செய்த ஆய்வு, யாருடனும் ஒப்பிட முடியாத அளவிற்குரிய ஆய்வாகும். மனுதர்ம சாஸ்திரத்திற்கு முன்னால் இருந்த காலத்தில் அனைவருக்கும் இருந்த உரிமைகளை எடுத்துக் காட்டினார். அவர் ஒவ்வொரு நாட்டின் சரித்திரங்களை படித்து, அடிமைத் தனத்தைவிட கொடுமையானது தீண்டாமைதான் என்பதை பல அடிமைத்தனத்தோடு ஒப்பிட்டு எழுதினார்.

அம்பேத்கர், வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினராக (இன்றைய மத்திய அமைச்சருக்கு இணையான பதவி) தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவி ஏற்பதற்கு முன்னால் நாக்பூரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். கற்பி போராடு ஒன்று சேர் என்ற வாசகங்களை பேசியது அந்த மாநாட்டில்தான். பெண்கள் உரிமைக்காக தனியாக ஒரு மாநாடு, சமத்துவ தொண்டர் படை என்ற ஒரு மாநாடு, காந்தியோடு முரண்பட்டிருந்த அம்பேத்கர், இம்சைக்கு எதிரான சொல்தான் அகிம்சை. சாதியவாதிகளால் தாக்கப்பட்டால் திருப்பி தாக்கலாம் என்பதை தனது தொண்டர்களுக்கு சொன்னார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என விளம்பரம் செய்து, அம்பேத்கரை தாழ்த்தப்பட்டவர்களின் தலைவராக சுருக்கிவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என்றோ அரசியல் சட்டத்தை எழுதியவர் என்றோ சொல்வது அவருக்கு பெருமை அல்ல. அவர் சொன்னார்... இந்து சமுதாயத்திற்கு வேதங்கள் தேவைபட்டது தாழ்த்தப்பட்ட வியாசனை வைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு இதிகாசம் தேவைபட்டது. தாழ்த்தப்பட்ட வால்மீகியை வைத்து எழுதிக் கொண்டார்கள். இவர்களுக்கு அரசியல் சட்டம் தேவைப்பட்டது. என்னைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அப்படித் தான் சொன்னார். இவர்கள் எங்கு போனாலும் தாழ்த்தப்பட்ட மக்களை பயன்படுத்தித்தான் தங்கள் உயர்வை நிறுவிக் கொண்டார்கள் என்று சொன்னார். நான் இந்த சட்டத்திற்கு கட்டுப்பட்டவன். ஆனால் மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னவர் அவர்தான். அவர் எழுதிய சட்டத்தைப் பற்றி. நான் வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டேன், என்னுடைய விருப்பத்திற்கு எதிராக பலவற்றை எழுதினேன் என்று சொன்னார். பேனாவை பிடித்தது மட்டும்தான் என் கை, அதை ஆட்டுவித்தவர்கள் பார்ப்பனர்கள் என்றும் சொன்னார். ஆந்திர பிரிவினை விவாதத்தின்போது பேசியவர்கள், 'நீங்கள் தானே சட்டத்தை எழுதினீர்கள்' என்று கேட்டனர். அவா சொன்னார்... 'ஆம் நான் தான் எழுதினேன். அதை எரிக்கும் முதல் ஆளாக நான்தான் இருக்கப் போகிறேன்' என்று. அரசியல் வரைவு குழுவிற்குள் நுழைந்தபோது, என்னுடைய மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தவிர, எனக்கு வேறு எந்த ஆசையும் இருக்கவில்லை என்று சொன்னார்.

'பெட்டி திருட்டுப் போனாலும் சாவி என்னிடம் இருக்கிறது என்றானாம் நாயர்' என்று மலையாள பழமொழி ஒன்று இருக்கிறது. அதுபோல அரசியல் சட்டத்திற்கு விளக்கம் சொல்பவர்கள் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். ஆனால் எழுதப்பட்ட அரசியல் சட்டங்களில் பலவற்றை அம்பேத்கர் செய்தார். எட்டு மணி நேர வேலை என்பதை வலியுறுத்தி, பிரஞ்சு இந்தியாவில் பாண்டிச்சேரியில் மட்டும் ஒரு போராட்டம் நடந்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் யாரும் போராடவில்லை. அம்பேத்கர் தொழிலாளர் துறை அமைச்சராக இருந்தபோது, அதற்கான சட்டத்தை கொண்டு வந்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் செய்ததா அது? பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்பதை கொண்டு வந்தவர் புரட்சியாளர் அம்பேத்கர் தான்.

அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் தான் அம்பேத்கர் இட ஒதுக்கீட்டை வைத்தார். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வைக்கவில்லை என்று அவர் மீது ஒரு குற்றச்சாட்டு வைக்கிறார்கள். இதில் நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் தான் பட்டியல் இருந்தது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பட்டியல் இல்லை. 1935 ஆம் ஆண்டு சட்டத்திற்கு முன்னாலேயே இரண்டு பட்டியலை தயாரித்து இருந்தார்கள். ஒன்று தீண்டாமைக்கு உட்பட்ட மக்கள், மற்றொன்று பொதுச் சமுதாயத்திலிருந்து விலகி, தனித்து வாழும் மக்கள். இந்த மக்களை பட்டியல் இன மக்கள் என தனியாக பிரிந்தார்கள். இந்த பட்டியலில் இருந்தவர்களுக்கான இடத்தை ஒதுக்கி அவரால் எழுத முடிந்தது. பட்டியலில் இல்லாத பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசியல் சட்டத்தில் 340 என்ற ஒரு பிரிவை எழுதினார். அரசு ஒரு ஆணையத்தை அமைத்து, சமுதாயத்திலும், கல்வியிலும் பின் தங்கியிருக்கும் மக்களின் பட்டியலை தயாரித்து, அவர்களின் மேம்பாட்டிற்கு செயல்பட வேண்டும் என்பதுதான் அந்த 340 ஆவது பிரிவு. எழுதியதோடு நிற்கவில்லை. அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து ஒன்றரை ஆண்டுகளில் அவர் பதவியில் இருந்து விலகினார். பதவியில் இருந்து விலகுவதற்கு சில காரணங்களை கடிதத்தில் எழுதியிருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆணையம் அமைத்து, அவர்களின் மேம்பாட்டிற்கு செயல்பட வேண்டும் என்று சட்டம் இயற்றி ஒன்றரை ஆண்டுகள் ஆகியும், அதற்கான ஆணையம்கூட அமைக்கவில்லை என்பது, அவர் பதவி விலக எழுதிய காரணங்களில் ஒன்று. இப்படிப்பட்டவரைத்தான் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் என்று சொல்கிறார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY   REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# எழுச்சியுடன் சைக்கிள் பேரணி - கபடி போட்டி - பொதுக் கூட்டம் : மேட்டூர் (ஆர்.எஸ்) பகுதியில் அம்பேத்கர் விழா





சேலம் மாவட்டம் மேட்டூர் ஆர்.எஸ். பகுதியில் திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ஏப்.14 அன்று பெரியார் அம்பேத்கர் பிறந்த நாள் விழா எழுச்சியுடன் நடந்தது. கபடி போட்டி, சைக்கிள் பேரணி, கலை நிகழ்ச்சி, பொதுக் கூட்டம் என்று நிகழ்ச்சிகள் எழுச்சி நடைபோட்டன.

காலை 10 மணிக்கு மேட்டூர் அணை குட்டி (எ) பத்மநாபன் நினைவுத்திடலில் எஸ். முருகேசன், ஜம்பு நதி (மேட்டூர் ஹைடெக் திளை ஆஷ் பிரிக்ஸ்) ஆகியோர் கபடி போட்டியை தொடங்கி வைத்தனர். இறுதிப் போட்டியை பிற்பகல் என். சந்திரசேகரன் (நகர செயலாளர், அ.இ.அ.தி.மு.க.) தொடங்கி வைத்தார்.

முதல் பரிசு ரூ.10 ஆயிரத்தை தேசிய சமூக விருது பெற்ற ஆ.டி.சலாம் (எ) தணிகாசலம் வழங்கினார். டி.கே.ஆர். நினைவு சுழற் கோப்பையை கே.இரமேஷ் (கே. அசோசியேட்ஸ்) வழங்கினார். இரண்டாம் பரிசு ரூ.7 ஆயிரத்தை பி. ஸ்டாலின் (மேட்டூர் அசோசியேட்ஸ்), மே.த. சரவணன் (பேத அசோசியேட்ஸ்) ஆகியோர் வழங்கினர். புலவர் இமயவரம்பன் நினைவு சுழற்கோப்பையை கே. இரமேஷ் வழங்கினார். மூன்றாம் பரிசு ரூ.4 ஆயிரத்தை ஜோ. இரகு (பெஸ்ட் பேப்ரிகேடர்ஸ்) வழங்கினார். மேட்டூர் கருப்பரசன் நினைவு சுழற் கோப்பையை கே. இரமேஷ் (கே அசோசியேட்ஸ்) வழங்கினார்.


மாலை 4 மணிக்கு நங்கவள்ளியிலிருந்து அம்பேத்கர் பிறந்த நாள் விழா சைக்கிள் பேரணி தொடங்கியது. கழக்த தலைவர் கொளத்தூர் மணி பேரணியைத் தொடங்கி வைத்தார். ,,6 மணியளவில் பேரணி, மேட்டூர் ஆர்.எஸ். வந்தடைந்தது. பேரணியை ஜோக்கர் திரைப்பட இயக்குனர் ராஜூ முருகன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி வரவேற்றனர்.

அங்கிருந்து கூட்டம் நடக்கும் ஊருக்குள் தலைவர், இயக்குனர், தோழர்கள், பெண்கள் பறை இசையோடு பேரணியாக சென்ற காட்சி எழுச்சி மயமாக இருந்தது. கட்சி பேதமின்றி ஊர் மக்களும், பேரணியில் பங்கேற்றனர். ஊரே விழாக்கோலமாக திகழ்ந்தது. மாலை 7 மணியளவில் கோனூர் தி.இராம கிருட்டிணன் நினைவு அரங்கில் சீனிவாச ராகவன் தலையையில் ம.சரத் குமார், சி.பிரசாத் குமார் முன்னிலையில் நடந்த பொதுக் கூட்டத்தில் அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, பொருளாளர் துரைசாமி, சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல், கதிரவன், சூ. கதிரவன் உரையைத் தொடர்ந்து திரைப்பட இயக்குனர் ராஜூ முருகன் உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். நிகழ்ச்சியில் அரும்பு அம்பேத்கர் குறித்து கவிதை வாசித்தார். நிகழ்வில் மேட்டூர், திருப்பூர், ஈரோடு, குருவாரெட்டியூர், காவலாண்டியூர் தோழர்கள் ஏராளமாக பங்கேற்றனர்.



பொறியாளர் இரா. ஸ்ரீராம் நன்றி கூறினார். நிகழ்வுகளை புத்தர் கலைக்குழுவுடன் கழகத் தோழர்கள் இணைந்து நடத்தினர்.


## வெளி வந்துவிட்டது! ‘நிமிர்வோம்’ மே இதழ்



- தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஜாதியக் கலாச்சாரம் – எம்.எஸ்.பாண்டியன்
- ஒரே ஓட்டு வித்தியாசத்தில் ஆட்சி மொழியான இந்தி – அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்கள்
- சுய நிர்ணய உரிமை கோருவது குற்றமா ?
- இராமானுஜர் ஆயிரமாண்டு விழா : சில கேள்விகள்
- பசு பாதுகாவலர்களே பதில் சொல்லுங்கள்! – தலையங்கம்
- இந்தி: அம்பேத்கரின் எச்சரிக்கை
- ‘ஹோம’ குண்டப் புகை உடலுக்கு நல்லதா ? – நக்கீரன்
- கடவுள் மறுப்பு: சங்க இலக்கியங்களிலிருந்து சுயமரியாதை இயக்கம் வரை – முனைவர் க. நெடுஞ்செழியன்
- ஜாதி அடையாளம் பெருமைக்குரியதா ? – பெரியார்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு : நிர்வாகி, ‘நிமிர்வோம்’ மாத இதழ், 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி எண் : 044 24980745 / 7299230363
www.dvkperiyar.com / nimirvomdvk@gmail.com


(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் தொட்டு இருக்கின்றார்கள். இல்லையென்று சொல்ல முடியாது. விவசாய இயக்கத்தை நடத்தியபோது, சாதிப் பிரச்சினையைத் தொட்டுச் சென்றுள்ளார்கள். நிலச்சுவான்தாரின் சாதி என்ன? கூலி விவசாயிகளின் சாதி என்ன? என்று தெரியாமல் அங்கு படுகொலைகள் நடக்காது. ஆனால் அம்பேத்கர் போல ஏராளமாகக் கருத்தாக்கத் தளங்களில் நுழைந்து நாம் விவாதிக்கவில்லை.

ஆகவே அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் மரபில் இடம் இல்லை என்று சொல்ல முடியாது. மரபில் இடம் வேண்டுமானால், வேதாந்தத்தைப் பேசினால்தான் உண்டு. சமஸ்கிருதத்தை ஏற்றுக் கொண்டால்தான் உண்டு என்ற வாதம் மிகமிக மொன்னையானது. இது இவர்களிடத்து கிடையாது. ஏன் புத்தரிடமும் அந்த ஏற்பு இல்லை தானே. கபீரிடம் கடுமையான பார்ப்பனிய, சனதான, மூடநம்பிக்கை எதிர்ப்பு உண்டு.

ஆகவே பெரியார், அம்பேத்கர் தொட்ட பிரச்சினைகளுக்குச் சமூக ரீதியான ஒரு வரலாறு இருக்கின்றது. இந்தப் பிரச்சினைகள் நேற்று, இன்று ஆரம்பித்தவை அல்ல; அவை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் ஆரம்பித்தவை. அந்தப் பிரச்சினைகளைப் பேசிய அம்பேத்கர், பெரியார் ஆகியோரும் அந்த மரபுகளுள் நின்றும், தாண்டியும்அந்தப் பிரச்சினைகளை எதிர்த்து, வெவ்வேறு தளங்களில் நின்று பேசுகிறார்கள்.

(தொடரும்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கண்டித்து தடையை மீறி சட்ட உரிமைகளை நிலைநாட்டுவோம்” என்று அறிவித்தார். (அறிக்கை முதல் பக்கத்தில் வெளியிடப்பட் டுள்ளது)

கழகத் தோழர்கள் கருத்துரிமை - உணவு உரிமைக்கான தடையை எதிர்த்து, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் 12.5.2017 பகல் 11 மணி அளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி முன்னிலையில் திரண்டார்கள்.

ஈரோடு, திருப்பூர், சேலம், கிருட்டிணகிரி, கோவை, நாமக்கல் மாவட்டங்களிலிருந்து 150க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டு, மாட்டிறைச்சி உண்ணும் போராட்டத்தை நடத்தி கைதானார்கள்.

மேட்டூர் சக்திவேல் (சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர்), கோவிந்தராசு (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர்), டைகர் பாலன் (மாவட்ட அமைப்பாளர்), நாமக்கல் மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் வைரவேல், சரவணன், முத்துப்பாண்டி; திருப்பூர் மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் முகில்ராசு, மாதவன், மணி, தனபால்; கோவை மாவட்ட பொறுப்பாளர்கள் நேருதாசு, நிர்மல் குமார், கிருட்டிண கிரி மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் குமார், பிரபு உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட தோழர்கள், “உணவு உரிமையை பறிக்காதே; கருத்துரிமையை பறிக்காதே” என்ற முழக்கத்தோடு மாட்டுக்கறி உண்ணத் தொடங்கினர். காவல்துறை அனைவரையும் கைது செய்தது.


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 18th May 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN